Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 3, Issue - 1, November 2023** **E-ISSN: 2583-0481**

# Role of Ramalingar in Change of Social Structure

**D. Jayalakshmi,** Tamil Research Scholar, Thiru Kolanjiayappar Government Arts College, Vriddhachalam, Thiruvalluvar University, Vellore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0002-9460-9759**
**Dr. S. Bouvanesvary,** Research Guide & Associate Professor of Tamil, Thiru Kolanjiayappar Government Arts College, Vriddhachalam, Thiruvalluvar University, Vellore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0004-0143-684X**
**DOI: 10.5281/zenodo.10389602**
**Received:** 30 August 2023; **Revised:** 15 September 2023 **Accepted:** 30 September 2023 **Available online:** 26 November 2023

## Abstract

*Vallalar was the one who wanted to change some unnecessary traditions that chained human society with social prejudices. He expresses his revolutionary ideas to change society in his didactic treatise "Thiruvarutpa". Various objections arose when this book was published. Though there was a different opposition, many people loved it. According to Ramalingar, Love, mercy and kindness should be shown not only to humans but also to other living beings, transcending caste, religion, race and language. His actions and opinions are extraordinary and as a seer who saw the pain and suffering of other lives pleaded for a good life for them. He was against non-vegetarianism and insisted other lives should not be killed and even the grass should not suffer. He wanted to change the evils in the society. Therefore, he set up a new movement named Samarasa Sutta Sanmarka Sangam and preached through Satya Dharmasala, Satya Gnanasabha and Siddhi Nilayam many years ago. When a man is born, death is certain. However, it has been highlighted in this article that he is the one who taught us to follow the path of Samarasa Sanmarka and attain immortality.*

**Keywords:** Ramalingar, Social Structure, Change.

## References

[1] Ramalinga Adigalar. *Thiruvarutpa*. Vallar Deiva Nilayam, Vadalur, 2002.
[2] Uranadigal. Thiruvarutpa Mulamum Uraiyum. Sutha Sanmarkka Araichi Nilayam, Vadalur, 1972.
[3] D. Gurunathan. "The Divine Thoughts of Vallalar." *Pandian Tamil Journal of Temple Studies*, E-ISSN: 2583-0880, Volume 1, Issue 1, November 2020.
[4] Thuru. V. Kalyana Sundharanar. *Chithantham.* Sadhu Achukudam, Chennai, 1935.
[5] Duraisamipillai, S. Ovai. *Thiruvarutpa Mulamum Uraiyum*. Varthamanan Pathipagam, Chennai – 17, Re-Edition, 2004.
[6] Parimelazhagar. *Thirukkural.* Tamil University, Thanjvavur, 2000.
[7] Dr. Swami Arudjothi Ananda. *Samayam Katantha Sanmarkkam*. World Samarasa Suddha Sanmarka Sathya Sangam, Pattukottai, Thanjavur.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்*



மலர் - 3, இதழ் - 1, கார்த்திகை 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சமூகக் கட்டமைப்புகள் மாற்றத்தில் இராமலிங்கர்

**த. ஜெயலட்சுமி**, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருத்தாசலம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0002-9460-9759**
**முனைவர் சி. புவனேஸ்வரி,** ஆய்வு நெறியாளர் & இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருத்தாசலம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0004-0143-684X**
**DOI: 10.5281/zenodo.10389602**

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித சமுதாயத்தை இரும்புக் கரம் கொண்ட சங்கிலி கொண்டு கட்டிக் காத்த சில தேவையற்ற மரபுகளை மாற்ற நினைத்தவர் வள்ளலார். அவர் மாற்ற நினைத்த சமுதாயத்தை திருவருட்பா நூலின் மூலம் வெளிப்படுத்துகிறார். இந்நூலினை வெளியிட்டபோது பல்வேறு எதிர்ப்புகள் தோன்றின. வெவ்வேறு வகையில் எதிர்ப்புகள் வந்தாலும் அதை எதிர்த்து போரிட்டபோது ஏற்றத்தைத்தான் அளித்தது அடிகளுக்கு. யாரெல்லாம் இதனை எதிர்த்தாரோ அவர்களே பிறகு ஏற்றுக் கொண்டனர். சாதி, மதம், இனம், மொழியென இவற்றைக் கடந்து பிற உயிர்களிடத்திலும் அன்பு, கருணை, தயவு போன்ற இரக்கம் காட்டப்பட வேண்டும். பிற உயிர்கள் படும் வேதனைகளையும், துன்பங்களையும் கண்டு இரங்கியதோடு அவைகளுக்காக வாதாட வந்த வக்கீலைப் போன்று அவருடைய செயல்களும் கருத்துக்களும் காணப் படுகின்றன. மனிதன் பிறந்தால் இறப்பு என்பது உறுதி. ஆனால் வள்ளலாரோ இறப்பில்லாமல் வாழலாம் என்பதை வாழ்ந்து காட்டி அவர் அடைந்த வழியினை நாமும் பின்பற்ற சொல்லிக் கொடுத்து சென்றவரும் அவரே என்பதை இக்கட்டுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.*

**குறிப்புச்சொற்கள்:** இராமலிங்கர், சமூகக் கட்டமைப்பு, மாற்றம்.

**முன்னுரை**

திருவருட்பிரகாச வள்ளலார் இறையருள் பெற்ற ஞானி மட்டும் அல்லாமல் மனித சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதல்களை விரும்பிய சீர்திருத்தவாதியும் ஆவார். இன்றைய உலகில் ஏற்பட்டுள்ள சமய சமூக மாறுதல்கள் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வள்ளலார் கண்ட கனவாகும். இவர் மனித குலத்தின் ஒற்றுமைக்குத் தடைகளாக இருக்கும் சாதி, குல, வர்ண பேதங்களை அழித்து ஒழிக்க பாடுபட்ட தமிழகத்தின் முதல் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் இயற்றிய நூல்களுள் ஒன்றான திருவருட்பாவில் **சமூகக் கட்டமைப்புகள் மாற்றத்தில் இராமலிங்கர்** என்னும் தலைப்பில் ஒரு சில பாடல்களைக் கொண்டு இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**எதிர்ப்பில் பெற்ற ஏற்றம்**

தமிழக வரலாற்று காலங்களில் தொன்று தொட்டு நிலவி வரும் எத்தகைய நல்ல கொள்கைக்கும் முதற்கண் கடுமையான எதிர்ப்பு எழுதல் உண்டு. பின்னர் அதற்கு ஆதரவாக மாறுவதும் உண்டு. சமயத்தையும் அன்பு அருளையும் பரப்ப வந்த அருளாளர்களுக்கு இது ஒன்றும் விதி விலக்கல்ல. எதிர்ப்பு இன்றி எந்த இயக்கமும் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை. எதிர்ப்பு ஏற்படா விட்டால் எந்த கொள்கையும் வெற்றி பெற முடியாமல் தள்ளாடி விழுந்து விடும். எனவே எதிர்ப்பு என்பது ஒரு சத்துணவு போன்றது என்றுக்கூட கூறலாம்.

1. **சைவம் தழைக்க வந்த சம்பந்தப் பெருமானுக்கு மதுரையில் சமணர்கள் காட்டிய எதிர்ப்பே சைவம் பரவத் துணை செய்தது.**
2. **இயேசுநாதருக்கு ஏற்பட்ட எதிர்ப்பே கிறிஸ்துவம் தோன்றுவதற்கு அடிப்படை ஆயிற்று.**
3. **நபிகள் நாயகத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பு இஸ்லாம் சமய வளர்ச்சிக்கு அடிகோலியது.**
4. **அருணகிரிநாதருக்கு சம்பந்தாண்டான் தந்த எதிர்ப்பே ஏற்றத்தை தந்தது.**

இவர்களின் வெற்றிக்குப் பின் எதிர்ப்பாளர்கள் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் இதில் வள்ளலாருக்கு ஏற்பட்ட எதிர்ப்பாளர்கள் சற்று மாறுபட்டதாக இருக்கின்றனர். என்னவென்றால் சம்பந்தப் பெருமான் முதல் அருணகிரிநாதர் வரை ஏற்பட்ட எதிர்ப்பு சக்திகளெல்லாம் தீமையின் மொத்த வடிவங்களாக இருந்தன என்பதால் அங்கே நன்மைகள் அதிக உழைப்பு அல்லது அதிக சக்தி போட வேண்டிய தேவையில்லை. இங்கே வள்ளலாருக்கு ஏற்பட்ட எதிர்ப்பு அலையானது தீய சக்தியிடம் இருந்து திரண்டது அல்ல, நல்ல சக்தியிடம் இருந்து பீறிட்டு எழுந்தது.

வள்ளலார் எந்த அளவிற்குச் சைவ சமயத்தின் மீதும் சிவபெருமான் மீதும் காதல் பக்தி கொண்டிருந்தாரோ அதே அளவு சைவ சமயத்தின் மீதும் நாயன்மார்கள் மீதும் பற்றுக் கொண்டிருந்தவர் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்கள். இவரின் சைவத் தொண்டினைப் பற்றி திரு. வி. க அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

> **இக்காலச் சைவப்பெரியோர் வாழ்வினுள் ஆறுமுக நாவலர் வாழ்வு சைவ உலகுக்கு எடுத்துக்காட்டாக நிற்கிறது. சிவத் தொண்டுக்கென தனது வாழ்வையே அர்ப்பணம் செய்தவர் நம் நாவலர் பெருமான் காலத்துக்கேற்ற தொண்டுகள் பல அவரால் செய்யப்பட்டன. (சித்தமார்க்கம், ப. 49)**

என்ற இக்கூற்றின்படி பார்க்கும்பொழுது ஆறுமுகநாவலரின் அக்கால தொண்டானது தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மையை அளித்துள்ளன. ஆகவே நன்மையை நன்மையே எதிர்த்துள்ளது. சைவத்தை சைவமே எதிர்த்துள்ளதைக் காண முடிகிறது. சைவத்தை இருவகையாக கணக்கிடலாம் ஒன்று சீர்திருத்த சைவம் மற்றொன்று வைதீக சைவம். வள்ளல் பெருமான் சைவ சமயத்தில் சீர்திருத்தம் செய்ய முயன்றவரே தவிர சாய்க்க முற்பட்டவர் அல்லர். யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் சைவ சமயத்தை காக்க துடித்தவரே ஒழிய கவிழ்க்க

நினைத்தவர் அல்லர் எனவே தான் இந்த போராட்டம் இருவரிடமும் ஏற்பட்டுள்ளது. ஆறுமுக நாவலரின் இந்த எதிர்ப்பு அலையானது அருட்பாவுக்கு வெற்றியைத் தேடித் தந்து இராமலிங்கப் பெருமானைப் புகழ் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது என்பதை நம்மால் புரிந்துக் கொள்ள முடிகிறது.

**ஆன்மநேய ஒருமைப்பாடு**

உலகில் உயிர்கள் பலவகையான தேகங்களைப் பெற்று வாழ்கின்றன அவை மனிதன், மிருகம், பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் போன்றவை ஆகும். இவையனைத்தும் பரமான்மாவால் படைக்கப்பட்ட ஜீவ ஆன்மாக்கள் என்பதால் இவ்வுயிர்களின் மீது ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையைக் காண்பதனை தம் கடமையாக கொண்டவர் வள்ளலார். சமரச சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியம் கொல்லாமை புலால் உண்ணாமை ஆகும். இந்த இரண்டுமே பல வருடத்திற்கு முன்னால் வள்ளுவம், சமணம், பௌத்தம், சைவ, வைணவத்தைப் பின்பற்றியவர்கள் எல்லாரும் கூறியிருக்கிறார்கள். இதில் வள்ளலார் மட்டும் சற்று மாறுபட்டு இவர்களைத் தாண்டி ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை என்று கொண்டு செல்கிறார். கம்யூனிசம் சோஷலிசம் பேசுபவர்கள் கூட ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் காட்டும் அன்பு மனிதநேயம் என்று கூறுகிறார். ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் காட்டுகிற அன்பா? மனித நேயம் அது சுயநல நேயம். இதை தவிர்த்து ஒரு மனிதனின் அன்பு எப்ப தூய தயவாக மாறுகிறது என்றால் பிற உயிர்களிடத்து அன்பு காட்டும் போது தூய தயவாக மாறுகிறது. ஒரு ஆன்மா இன்னொரு ஆன்மா மீது காட்டுகிற அன்பு, தயவே ஆன்மநேய ஒருமைப்பாடு ஆகும் என்கிறார் வள்ளல் பெருமான்.

**கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை. (திருக்குறள் - 9)**

**இறைவன் தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல் முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களில், நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை எனும் எண்வகைக் குணங்களையுடையவன். தமிழ் முன்னோர்களால் தொன்றுதொட்டுத் வழிபடப் பெற்றுவரும் இவ்எண்குணங்களையுடைய இறைவனது தொன்மைக் கோலத்தினை உளங்கொண்ட திருவருட்பிரகாச வள்ளலார் (த. குருநாதன், ப க். 4) என்று குறிப்பிடுகின்றார்**

திருவருட்பிரகாச வள்ளலார்,

**எண்குணமா சத்தி இந்தச் சத்திதனக் குள்ளே**
**இறையாகி அதுஅதுவாய் இலங்கிநடம் புரியும்**
**தன் கருணைத் திருவடியின் பெருமைஅறி வரிதேல் (திருஅருட்பா, பா. 1135)**

என்று குறிப்பிடுகின்றார். இராமலிங்கடிகளும் ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்குத் தடையாக உள்ள எதனிடத்திலும் எந்த காலத்தும் பற்றுக் கொள்ளாதவர். அத்தகைய பற்றுக்கள் தம்மைப் பற்றாத வண்ணம் அருள்புரியுமாறு இறைவனை இடையறாது பிரார்த்தித்தவர். இதனை,

> **எல்லாம் உடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்து அருளல் வேண்டும். (திருவருட்பா., சுத்த சன்மார்க்க சத்தியச் சிறுவிண்ணப்பம், ப. 1075)**

என்பதுவே ஒவ்வொருவருக்கும் உரிய பிரார்த்தனையாக இருக்க வேண்டும் என்று அடிகள் போதித்தார்.

அடிகள் போதித்ததன் படி உயிர்கள் அனைத்திடமும் அன்பு செலுத்த வேண்டும் என்பது ஜீவகாருண்யம் என்று கூறுகிறார். இவர் கூறியதில் இருந்து இன்னும் சற்று மேலே சென்று தேக பேதங்களை மறந்தவர் ஆகி உயிர்கள் எல்லாம் ஒரே இனத்தைச் சார்ந்தவை என்று கூறுகிறார். ஒரு ஆன்மா இன்னொரு ஆன்மா படும் துன்பங்களையும் துயரங்களையும் பார்த்து பதைப்பதைத்து துயரங்களைத் தீர்க்கும் பொழுது தான் அங்கு ஆன்மநேய ஒருமைப்பாடு காணப்படுகிறது என்கிறார் வள்ளல் பெருமான். பிற உயிர்கள் படும் துன்பத்தினைக் கண்டு தான் துடித்ததை,

> **துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெலாம் பயந்தேன் கண்ணினால் ஐயோ பிறவுயிர் பதைக்கக் கண்டகா லத்திலும் பதைத்தேன் மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி வகைகளும் கண்டபோ தெல்லாம் எண்ணிஎன் உள்ளம் நடுங்கிய நடுக்கம் எந்தைநின் திருவுளம் அறியும். (திருவருட்பா மூலமும் உரையும், பா. 3473)**

இப்பாடலடிகளில் கொடியவர்கள் மக்களல்லாத பிறவுயிர்களை அச்சுறக் கொல்லத் தொடங்கிய போதும், அவ்வுயிர்கள் கொலையுண்டு துடிப்பதைக் கண்களால் கண்டபோதும், ஐயோவென்று என் மனம் துடி துடிக்கின்றது. நிலத்தின் மேல் வேட்டைக்குரிய வலைகளையும், தூண்டில்களையும், கண்ணி (பறவைகள்) வகைகளையும் பிறர்பால் இருக்கக் கண்ட காலங்களில் அவற்றால் கொல்லப்படும் உயிர்களை நினைந்து என் மனம் எய்திய நடுக்கத்தைத் தேவனின் திருவுள்ளம் அறியுமோ? என்று கூறுவதின் மூலம் அவர் திருவுள்ளம் துடித்த காட்சியை நம்மால் உணர முடிகிறது. இவ்வாறு பிறவுயிர்களின் மீது கருணை என்கிற இந்த சின்ன அருளை நாம் செய்தால் பெரிய அருள் நமக்கு கிடைக்கும். அதாவது ஆன்மநேய

ஒருமைப்பாட்டினை கடைபிடித்தால் மரணமிலாப் பெருவாழ்வு என்கிற பேரருள் கிடைக்கும். மரணமிலாப் பெருவாழ்வு என்பதை கீழ்வரும் தலைப்பின் வழி அறிய முற்படலாம்.

**மரணமிலாப் பெருவாழ்வு**

பிறந்தவர் யாவரும் இறப்பது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால் மனிதன் இறவாமல் என்றென்றும் வாழ்ந்திருத்தல் சாத்தியம் என்கிறார் மெய்ஞ்ஞானியாகிய வள்ளலார். சிவன் விடமுண்டும் சாகாதவன் ஆதலால் அவன் அருளிலே இரண்டறக் கலந்தவர்களுக்கும் மரணமிலாப் பெருவாழ்வு சித்திக்கும் என்று நம்புகின்றார். மணிவாசகப் பெருமான் 'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்', 'அல்லற் பிறவி அறுப்பவன்' என்றெல்லாம் இறைவனைப் பாடினார். வள்ளலாரோ 'இறப்பறுக்கும்' பெருமானாகவும் இறைவனை வேண்டுகிறார். மனிதன் சாவாமல் வாழ வேண்டுமாயின் அத்தகைய வரத்தினைக் கோரி இறையருளைப் பிரார்த்திக்க வேண்டும். இறைவனை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து தொழுதால் மட்டுமே இறவா வரம் பெறலாம் என்று கூறுகிறார் இராமலிங்க அடிகள். இறவா வரம் பெற்றதை,

**இறவா வரமளித் தென்னைமேல் ஏற்றி**
**அறவாழி ஆம்தனி அருட்பெருஞ்சோதி (திருவருட்பா., அகவல், 157-158, ப. 840)**

என்று பாடுகிறார். தமது பனிரெண்டாம் வயதில் தவவாழ்க்கையை ஆரம்பித்து பூத நிலையைக் கடந்து, சுத்த சிவநிலை அனுபவத்தைப் பெற்று ஒளிவுடம்பாக மாற்றுகிறார். அதாவது தூலதேகமாக இருந்த அவரது உடலை சுத்ததேகம், பிரணவ தேகம், ஞானதேகமாக மாற்றிக் கொள்கிறார். இதனை,

**ஏறா நிலைமிசை ஏற்றியென் றனக்கே**
**ஆறாறு காட்டிய அருட்பெருஞ்சோதி (திருவருட்பா., அகவல், 17-18, ப. 836)**
**சாவா நிலைஇது தந்தனம் உனக்கே**
**ஆவா எனஅருள் அருட்பெருஞ்சோதி (திருவருட்பா., அகவல், 209-210, ப. 841)**
**எவ்வழி மெய்வழி என்பவே தாகமம்**
**அவ்வழி எனக்கருள் அருட்பெருஞ்சோதி (திருவருட்பா., அகவல், 201-202, ப. 841)**

என்றும்

**இறவாமை ஈந்தான்என்று ஊதூது சங்கே**
**எண்ணம் பலித்ததென்று ஊதூது சங்கே**
**திறமே அளித்தான்என்று ஊதூது சங்கே**
**சிற்றம் பலத்தான்என்று ஊதூது சங்கே (திருவருட்பா மூலமும் உரையும், பா. 5278)**

என்ற பாடலும், மேலும்,

**அருட்ஜோதி யானேனென் றறையப்பா முரசு**
**அருளாட்சி பெற்றேனென் றறையப்பா முரசு**
**மருட்சார்பு தீர்ந்தேனென் றறையப்பா முரசு**

**மரணந் தவிர்ந்தேனென் றறையப்பா முரசு (திருவருட்பா மூலமும் உரையும், பா. 5295, சமயம் கடந்த சன்மார்க்கம், ப. 54)**

ஆகிய இப்பாடல் அடிகளில் இராமலிங்கப் பெருமானாரின் உள்ளத்தில் இறைவன் புகுந்து விட்டார் என்பதையும், அருட்சோதி ஆனேன் என்று அவரே கூறியுள்ளதையும், தமக்கு மரணமிலாப் பெருவாழ்வு கிடைத்துவிட்டது என்பதையும் சங்கூதியும், முரசறைந்தும் உலகுக்கு அறிவிக்கின்றார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அருட்பிரகாச வள்ளலார் திருக்கதவினை மூடிச் சென்று உள்ளே தியானத்தில் ஈடுபட்ட பொழுது, மரணமிலாப் பெருவாழ்வு அடைந்த நிலையை உலகிற்குத் தெரிவிப்பதற்கு,

**என்சாமி எனதுதுரை என்வுயிர்நா யகனார்**
**இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்றார்**
**மின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது**
**பேர்உடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்**
**தன்சாதி உடையபெரும் தவத்தாலே நான்தான்**
**சாற்றுகின்றேன் அறிந்ததிது சத்தியம் சத்தியமே**
**மின்சாரும் இடைமடவாய் என்மொழிநின்**
**தனக்கே வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே (திருவருட்பா மூலமும் உரையும், பா. 5818)**

என்ற இப்பாடலைப் பாடியுள்ளார். இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் தனது உடம்பினை ஒளிவுடம்பாக மாற்றுவதற்கு முன்பு இறைவனை பார்த்திருக்கிறார். இறைவனுடன் கலப்பதற்கு முன்பு 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது போன்று இறைவனிடம் கால அவகாசம் கேட்டு அவர் கண்ட காட்சியினை இவ்வுலகுக்கு தெரியப்படுத்தி பிறகு இறைவனிடம் கலந்துள்ளார். இது உண்மை சத்தியம் என்று கூறியிருக்கிறார். இந்த உண்மையை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்பதற்காக அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைச் சிறிது நேரம் காக்க வைத்து, கால அவகாசம் பெற்று தெரிவித்துள்ளதைக் காண முடிகிறது.

**முடிவுரை**

வள்ளலார் தாம் நினைத்த பெரிய காரியங்களைத் தொலைநோக்கு பார்வையுடன் ஆராய்ந்து தமிழ் புலமையைக் காட்டும் வகையில் திருவருட்பாவை இயற்றியுள்ளார். இந்நூல் மீது எதிர்ப்புகள் பல வகையில் இருந்தும் பின்பு வெற்றி பெற்றுள்ளது. திருவருட்பாவை ஆய்வு கட்டுரைக்கு உட்படுத்தி எதிர்ப்பில் பெற்ற ஏற்றம் குறித்தும், ஆன்மநேய ஒருமைப்பாடு குறித்தும், மரணமிலாப் பெருவாழ்வு குறித்தும் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

**குறிப்பு நூல்கள்**

[1] இராமலிங்க அடிகளார். *திருவருட்பா*. வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர், 2002.

[2] ஊரணடிகள். *திருவருட்பா மூலமும் உரையும்*. சுத்த சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், முதற்பதிப்பு, 1972.

[3] த. குருநாதன். "வள்ளலாரின் இறைநெறிச் சிந்தனைகள்." *பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்*, E-ISSN: 2583-0880, தொகுதி-1, இதழ் 1, நவம்பர் 2020.

[4] திரு. வி. கலியாணசுந்தரனார். *சித்தமார்க்கம்.* சாது அச்சுக்கூடம், சென்னை, 1935.

[5] துரைசாமிப்பிள்ளை. சு. ஔவை. திருவருட்பா மூலமும் உரையும். வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17, மறுபதிப்பு, 2004.

[6] பரிமேலழகர். *திருக்குறள்.* தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2000.

[7] முனைவர் சுவாமி அருட்ஜோதி ஆனந்தா. *சமயம் கடந்த சன்மார்க்கம்.* உலக சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.